# ரூ.680 கோடியில் - இதர மாவட்டச் சாலைகளாகத் தரம் உயர்த்தப்படும்!

## சட்டப்பேரவையில் - அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்று நான் குறிப்பிட்டேன். எனக்கும் ஒரு தட்டு கொடுங்கள் என்று கூறி, அவருக்கும் ஒரு தட்டை கொடுத்து, roadல் அமர்ந்து சாப்பிட்டு, அங்குள்ள நிலைமைகளை சீர் செய்தோம்.

அந்த அடிப்படையில் 20222023 நிதி யாண்டில் மழைவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 725 கோடி மதிப்பீட்டில் சீரமைப்புப் பணிகள் இன்றைக்கு சிறப்பாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்த அரசைப் பொறுத்த அளவுக்கு, நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர்களெல்லாம், சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் இருப்பார்கள் என்று கருதுகிறேன். பத்திரிகை நண்பர்கள் இருக்கிறார்கள். ஏனென்றால், புரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக சொல்கிறேன். இந்த மூன்றாண்டு காலமாக நாங்கள் தொடர்ந்து நிதிநிலையை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒதுக்குகிறோம். ஒதுக்கிய வகையில் கிட்டத்தட்ட 42,662 கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது.

இதில் கடந்த அரசால் எடுத்துக்கொள்ளப்பட்டு நிலுவையில் இருக்கிற பணிகளுக்கும் இந்த அரசால் அதிக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. எனவேதான், தாயுமானவராக இருந்து ஆட்சி நடத்துகிற தலைவர் என்று நாங்கள் காரணமில்லாமல் சொல்லவில்லை. அவர்களது அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு 26,321 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறோம். ஆனால், நமது அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்கு எவ்வளவு நிதியை நாம் செலவு செய்திருக்கிறோம் என்றால், 16,374 கோடி ரூபாய் மட்டும்தான். அப்படிப் பார்த்தால், அவர்கள் அறிவித்த திட்டங்களுக்கு, இந்த ஆட்சியில் சுமார் 62% நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்ததாக, தமிழ்நாடு கடல்சார் வாரியம். நாகப்பட்டினம் துறைமுகத்தில் பயணியர் முனையம் அமைக்கப்பட்டு, 14102023 அன்று பயணியர் கப்பலை இலங்கையிலுள்ள காங்கேசன்துறை துறைமுகத்திற்கு துவக்கி வைத்த பெருமை எனக்கும் கிடைத்தது. இராமேஸ்வரம் - தலைமன்னார் இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்து துவக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2023 அக்டோபர் மாதத்தில், மும்பையில் நடைபெற்ற ‘உலகளாவிய கடல்சார் உச்சி மாநாட்டில்’, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், நானே நேரில் கலந்துகொண்டேன். அப்போது, தமிழ்நாட்டில், துறைமுகம் மற்றும் கடல்சார் மேம்பாட்டில் முதலீடு செய்ய முதலீட்டாளர்களுக்கு நேரடி அழைப்பு விடுத்தேன். ஏனெனில், தமிழ்நாட்டில் 17 சிறு துறைமுகங்கள் இருக்கின்றன. அவற்றை விரிவு படுத்துவதற்காக அழைப்பு விடுத்தேன். சிங்கப்பூர் என்ற ஓர் ஊர் எவ்வாறு இத்தகைய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது என்றால், துறைமுகத்தின் மூலமாகத்தான். எனவே, அந்த கடல்சார் உச்சி மாநாட்டில், கடல்சார் மேம்பாட்டிற்கு நீங்கள் அனைவரும் வர வேண்டும் என்று முதலீட்டாளர்களை அழைத்திருக்கிறேன்.

ஒன்றிய அரசின் சாகர்மாலா திட்டத்தின்கீழ், குமரிமுனையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் நிறுவப்பட்டுள்ள அய்யன் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் பாறையையும் இணைக்கும் பாதசாரிகள் நடை மேம்பாலம் ரூ.37 கோடியில் அமைக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

## 1987 ஆம் ஆண்டு துப்பாக்கிச் சூட்டில் பலியான 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம்!

அடுத்து, பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம். பூம்புகார் கப்பல் போக்கு வரத்துக் கழகம் என்பது 1141974ல்தான் என் தலைவர் கலைஞர் அவர்களால், நிறுவனங்கள் சட்டம், 1956ன்கீழ் நிறுவப்பட்டது. கப்பல்மூலம் நிலக்கரியை எடுத்துச் செல்கிற பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. அந்தக் கப்பலாகிவிட்ட காரணத்தினால், கடந்த ஆட்சியில் ஏல விற்பனை செய்யப்பட்டுவிட்டது. அதனால், தற்போது தனியார் கப்பல்கள் ஒப்பந்தம் போடப்பட்டு, 3 இடங்களில் 500 மெகா வாட் திறன் கொண்ட வல்லூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை எடுத்துச் செல்லும் முகவராக இருந்து பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் செயல்பட்டு வருகிறது. கன்னியாகுமரி, படகுத் துறையில் இருந்து விவேகானந்தர் நினைவுப் பாறை, அய்யன் திருவள்ளுவர் சிலை மற்றும் வட்டக்கோட்டை வரை படகுப் போக்குவரத்தினையும் மேற்கொண்டு வருகிறது. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் கடந்த இரண்டு வருடங்களாக இலாபத்தில் இயங்கி வருகின்றது என்பதையும், மேலும், இந்நிறுவனத்தை மேலும் மேலும் மேன்மைப் படுத்துவதற்கு இந்த அரசு உறுதுணையாக உழைக்கும் என்று நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையின் சார்பாக இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பொதுப் பணித் துறை

பொதுப் பணித் துறை சார்பாக இந்த மானியக் கோரிக்கையில் உரையாற்ற வாய்ப்பளித்ததற்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அசோகர் காலத்து கல்வெட்டுகளும், ஸ்தூபிகளும் இல்லாமல் போயிருந்தால், மௌரியப் பேரரசனின் மாட்சியினை, மனிதத்தன்மையினை நம்மால் உணர்ந்திருக்கவே முடியாது.

டெல்லியிலே உள்ள குதுப்மினார் சொல்லும் சரித்திரச் சான்றுகள்தான் எத்தனை! எத்தனை!

ஆக்ராவில் ‘ஷாஜகானின் தாஜ்மஹால்’தான் காதல் காவியத்தின் கோவிலாக இன்றைக்கும் ஒளி வீசிக் கொண்டிருக்கிறது.

இவை எல்லாம் வரலாறு எனும் அருமையான தங்கப் பேழைக்குத் திறவுகோலாகத் திகழ்பவையே! குமரிமுனையில் முத்தமிழறிஞர் கலைஞர் நிறுவியுள்ள ‘அய்யன் திருவள்ளுவர் சிலை’ அந்தத் தங்கப் பேழையின் திறவுகோ ல் தானே! அதை உருவாக்கியதும் பொதுப் பணித் துறைதானே!

பொது மராமத்துத் துறை என இருந்தது, 1967ல் பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர்தான், ‘பொது மராமத்துத் துறை’ என்ற பெயரை மாற்றி, தூய தமிழில் ‘பொதுப் பணித் துறை’ என பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

இன்று உலகத் தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம் வாழும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், முதன்முதல் அமைச்சராகப் பொறுப்பேற்றதும் அந்தப் பொதுப் பணித் துறைதான்.

எனவே, அந்தப் பொதுப் பணித் துறைக்கு என்னை அமைச்சராக்கி எனக்கு அறிவுரை வழங்கிக் கொண்டிருக்கின்ற தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். பொதுப் பணித் துறையைப் பொறுத்தளவில், பொதுவாக அரசின் கட்டமைப்புகளை உருவாக்குவதுதான் இதனுடைய முக்கியத்துவம். 1858ல் உருவாக்கப்பட்ட இந்தத் துறை, 165 ஆண்டுகளுக்கும் மேலாக பீடு நடை போட்டு ஒரு தாய்த் துறையாக இந்தத் துறை இருக்கிறது.

## ‘கலைஞர் உலகத்தை பிரதிபலிக்கக் கூடிய’ கலைஞர் நினைவிடம்!

இத்துறையில், கட்டட கலைஞர்கள் பிரிவு, திட்டம் மற்றும் வடிவமைப்புப் பிரிவு தரக்கட்டுப்பாட்டுப் பிரிவு, புராதன கட்டடங்களை புனரமைக்கும் பிரிவு, கொதிகலன் பிரிவுகள் மதுரை, திருச்சி, கோயம்புத்தூர் மற்றும் சென்னை ஆகிய நான்கு மண்டலங்களைத் தலைமையிடமாகக் கொண்டு பொறியாளர்களை வைத்து, சிவில் மற்றும் மின் பொறியியல் பிரிவுகளை இயக்கி பல்வேறு அரசு துறைகளில் கட்டடங்களைக் கட்டுவது மற்றும் பாராமரிப்புப் பணிகளை செய்துவதுதான் இந்தத் துறையினுடைய பணியாக இருக்கிறது.

இந்தத் துறையில் அனைத்துப் பணிகளும் நிர்வாக ரீதியாக முதன்மைத் தலைமைப் பொறியாளர்மூலம் ஒருங்கிணைக்கப்படுகிறது.

பொதுப் பணித் துறை, அரசு மற்றும் தனியார் கட்டடங்களுக்கு கட்டட உறுதிச் சான்றிதழ் வழங்குகிறது. எம்.சாண்ட் மற்றும் இதர கட்டுமானப் பொருட்களுக்கு தரச் சான்றிதழ் வழங்குவதும் இந்தத் துறையின் பணிதான். முக்கிய பிரமுகர்கள் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பதும் இந்த நாட்டினுடைய பிரதம அமைச்சராக இருந்தாலும், கீழே இருக்கிற நம்முடைய அமைச்சர் பெருமக்களாக இருந்தாலும் ஒருங்கிணைக்கின்ற பொறுப்பு பொதுப் பணித் துறைக்குத்தான். இன்னும் சொல்லவேண்டுமென்றால் நாம் அனைவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருக்கின்ற அந்த மைக், ஒளிமயமாக இருக்கின்ற light, உட்கார்ந்து கொண்டிருக்கக்கூடிய chair இவை அத்தனையும் ஒருங்கிணைப்பது கூட பொதுப் பணித் துறைதான்.

எனவே அந்த முக்கியப்பெரும் பணிகளை ஒருங்கிணைப்பது பொதுப் பணித் துறைதான். செந்தர விலைப்பட்டியல் (Schedule of Rates) & தளப்பரப்பு விலைப்பட்டியல் (Plinth Area Rates) தயாரித்து அனைத்து துறைகளுக்கும் வழங்குதல் ஆகிய பணிகளையும் பொதுப் பணித் துறைதான் மேற்கொள்கிறது. இன்னும் சொல்லப்போனால் நம்முடைய தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாசகத்தைச் சொன்னார். திராவிட மாடல் ஆட்சி என்று சொன்னால் இரண்டு கண்கள் ஒன்று மருத்துவம் மற்றொன்று கல்வி.

அதனால்தான், 20232024 ஆம் நிதி யாண்டில், தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் மருத்துவத் துறைக்கு அதிகமாக நிதியொதுக்கியதன் காரணமாகத்தான் 179 கட்டடங்களில், 121 கட்டடப் பணிகள் முடிவுற்று இருக்கின்றன. 71 அரசு தொழிற்பயிற்சி நிலைய கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 34 கட்டட பணிகள் நடைபெற்று வருகின்றன. 12 நீதிமன்ற கட்டடங்கள் மற்றும் குடியிருப்பு கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 21 கட்டட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 5 பாரம்பரிய கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு, 39 பாரம்பரிய கட்டடங்கள் புனரமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. நபார்டு நிதியுதவி திட்டத்தின்கீழ், 68 உயர்நிலை பள்ளிகள், மேல் நிலை பள்ளிகள் மற்றும் மாதிரி பள்ளி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டு, 476 கட்டட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதுதவிர, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை உருவாக்குகிற வருவாய்த் துறை, பொதுத் துறை, விளையாட்டு மேம்பாட்டுத் துறை, வணிக வரி மற்றும் பதிவுத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, தமிழ் வளர்ச்சித் துறை, தகவல் மற்றும் மக்கள் தொடர்புத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதி திராவிடர் நலத் துறை, கூட்டுறவுத் துறை, போக்குவரத்துத் துறை, கைத்தறி மற்றும் துணி நூல் துறை, பெருந்தொழில் துறை இப்படிப்பட்ட துறைகளின் சார்பாகக் கட்டடங்களைக் கட்டி முடிப்பதும் இந்த பொதுப் பணித் துறைதான். இத்தகு சிறப்பானப் பணிகளை பொதுப் பணித் துறை செய்து வருகிறது.

அதே நேரத்தில், பொதுப் பணித் துறை மேற்கொண்ட முத்திரைத் திட்டங்கள் ஒன்றிரண்டை மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கலைஞர் நூற்றாண்டு பன்னோக்கு மருத்துவனை. நான் முதலிலேயே பட்டியலிட்டேன். நூற்று க்கணக்கான கட்டடங்களைப் பொதுப் பணித் துறை கட்டி முடித்தாலும்கூட முத்தாய்ப்பாக இந்த ஆண்டு செய்த ஒன்றிரண்டை நான் சுட்டிக் காட்ட விரும்புவது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், ஏழை எளியவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க கலைஞர் காப்பீட்டுத் திட்டத்தினை தொடங்கினார். ஏனெனில் ஒருகாலத்தில் அனைவரும் அப்பல்லோ மருத்துவமனைக்குச் சென்று வைத்தியம் பார்க்கமுடியாது. அதற்காகத்தான் சொன்னேன். ஏழைக்கு ஒரு உயிர் பணக்காரனுக்கு ஒரு உயிர் அல்ல. ஏழைக்கும் பணக்காரனுக்கும் ஒரே உயிர் தான். அதனை உணர்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்கின்ற காரணத்தினால் தான் இந்தியாவிலேயே முதன்முதலாக கலைஞர் காப்பீட்டுத் திட்டம் என்னும் அற்புதமான திட்டத்தைக் கொண்டு வந்தவர் தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள்.

அதனால்தான் அவர் வழியில், திராவிட மாடல் ஆட்சிநடத்திக்கொண்டிருக்கிறநமது முதலமைச்சர் அவர்கள் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிண்டி கிங் இன்ஸ்டியூட் வளாகத்தில், 1,000 படுக்கைகளுடன், வேறு எங்கும் இல்லாத வசதி வாய்ப்புகளுடன் தனியார் மருத்துவமனைகள் ஒப்பிட்டுக்கூட பார்க்க முடியாத அளவிற்கு மருத்துவமனை துவங்கப்பட்டுள்ளது. இன்னும் சொல்லப்போனால் குறிப்பிட்ட சில சிகிச்சை களுக்காக பலர் சிங்கப்பூர் செல்கிறார்கள். அந்த சிங்கப்பூருக்கு இணையாக இந்தியாவில் ஒரு மருத்துவமனை இருக்கிறது என்று சொன்னால், கிங் இன்ஸ்ட்டியூட் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள தலைவர் கலைஞர் அவர்களுடைய பெயரால் இருக்கின்ற அந்த மருத்துவமனைதான். 1,000 படுக்கைகள் வசதி கொண்டது. சிறப்பான மருத்துவர்கள் எல்லாம் பணியாற்றிக் கொண்டிருக்கின்ற அந்தக் கலைஞர் நூற்றாண்டு விழா மருத்துவமனையைக் கட்டியதும் எங்கள் பொதுப் பணித் துறைதான்.

அதோடுமட்டுமல்ல, நேற்றுகூட நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, கலைஞர் நூற்றாண்டு நூலகம் குறித்து இங்கே குறிப்பிட்டார். அவர் பெருமையாகப் பேசுகிறபோது எனக்கே பூரித்துப்போய்விட்டது. காரணமென்ன? ஓர் அற்புதமான, இன்னும் சொல்லப் போனால் தென்னகத்தில் இருக்கிறவர்களெல்லாம் படிக்கிற நூலகம். பேரறிஞர் அண்ணா கலைஞருக்கு அவர்தான் ஆசிரியர். அவர்தான் குருநாதர். அவர்தான் அவருக்குத் தலைவர். ஆனால், அண்ணா அவர்களின் நூற்றாண்டை நினைவுபடுத்துவதற்கு கோட்டூர்புரத்திலே கலைஞர் கட்டினார் அண்ணா நூற்றாண்டு நூலகம். ஆனால், என் தலைவர் தளபதிக்கு குருவாக, தலைவராக இருந்த கலைஞரை நினைவூட்டுவதற்காக தென்னகப் பகுதி மக்களெல்லாம் விருப்பத்திற்கிணங்க, மதுரையிலே கலைஞர் பெயரால் நூற்றாண்டு அடையாளப்படுத்துவதற்காக ஒரு நூலகத்தை நவீன முறையிலே அது கட்டப்பட்டிருக்கிறது. நேற்று அவர் சொன்னதைப்போல மதுரையில் கவின்மிகு கலைஞர் நூற்றாண்டு நூலகம். ஆன்றோர், சான்றோர் எல்லாம் பாராட்டும் வண்ணம் முதலமைச்சர் அவர்களால் திறக்க ப்பட்டது. இந்த நூலகத்தை ஏறத்தாழ 9 இலட்சத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் அதைப் பயன்படுத்தியுள்ளனர்.

அதோடு மட்டுமல்ல; சங்க இலக்கியங்கள் நமது சங்க இலக்கியங்களான தொல்காப்பியம், பத்துப் பாட்டு, கலித்தொகை மற்றும் சிலப்பதிகாரத்தில் ஏறு தழுவுதல் பற்றிய குறிப்புகள் இடம் பெற்றுள்ளது. ஏறு தழுவுதல் என்று இலக்கியத்தில் சொன்னாலும் தெற்கே இருப்பவர்கள் ஜல்லிக்கட்டு என்று இளைஞர்கள் சொல்வார்கள். இந்தக் காப்பியத்திலே ஏறு தழுவுதல்பற்றிக் குறிப்பிடுகிறார். அதிலே ஒரு பகுதி அழகாத்தேவன் ஒய்யம்மாள்நாட்டார் கதைப் பாடலில், இன்றைக்கும் அங்கு நடைமுறையில் இருக்கிறது. அழகாத்தேவன் - ஒய்யம்மாள்நாட்டார் என்கிற ஒரு கதைப்பாடல்.

“கெழக்கே பிறந்த காளை
கீழக்குடி ஒய்யம்மா காளை
வேட்டி வச்ச ஆம்பள சிங்கம்,
அங்காளி பங்காளி அண்ணன் தம்பி
யாரொருவனும் இங்கே நிக்காதீங்க,
அண்ணன் தம்பி பங்காளி யாரும்
இங்கே நிக்காதீங்க,
மொறையுள்ள மச்சான்மார்கள்
மொறையுள்ள மச்சான்மார்கள்
யாராக இருந்திட்டாலும் ஏழு காளை புடிச்சவங்க,
என்னத் தாலி கட்டிக்கங்க”

என ஒரு வீரத் தாய் சொல்கிறாள். தாலி கட்டிக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் 7 காளைகளை அடக்கி வந்தால் என் தாலியைக் கட்டிக் கொள்ளலாம். எனவே, முறைமாமன் வாருங்கள் என்று அந்த பகுதியிலே இந்த சங்க இலக்கியப் பாடல் இருக்கிறதென்று சொன்னால், ஏறத்தாழ தொல்காப்பியர் காலமென்று சொல்கிற 4,000 ஆண்டு என்று இப்படிப்பட்ட காலங்களைக் கணக்கெடுக்கிறபோது 4,000 ஆண்டுகளுக்கு முன்னால் பண்பட்ட தமிழனுடைய பண்பாட்டினுடைய ஒரு சின்னமாக இருந்தது ஏறு தழுவுதல்/ அந்த ஏறு தழுவுதல் என்கிற ஜல்லிக்கட்டு என்று இன்றைக்கு இளைஞர்கள் அழைக்கிற அந்த ஜல்லிக்கட்டு என்கிற ஏறு தழுவுதல் ஐரோப்பா போன்ற நாடுகளில் ஒரே இடத்தில் அரங்கம் அமைத்துக் கொண்டு அதை நடத்துகிறார்கள். அதை நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கண்டதன் விளைவாக அந்த உந்து சக்திதான் தமிழ்நாட்டின் தென் பகுதிக்கு இதை உயிர்ப்பாக நினைக்கிறார்கள். எனவே, இதைக் கட்ட வேண்டுமென்ற அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்த அருங்காட்சியகத்தோடு கலைஞர் நூற்றாண்டு ஏறு தழுவுதல் அரங்கத்தைக்கட்டி கடந்த ஜனவரி மாதம் அதை அவரது திருக்கரத்தால் திறந்து வைத்தது மட்டுமல்ல, தென்னக மக்களுக்கு பெருமை சேர்த்துள்ளார்கள்.

அதோடு மட்டுமல்ல. இங்கே உட்கார்ந்திருக்கிற அமைச்சர் பெருமக்களாக இருக்கிற நாங்கள் எங்களுக்கு முகவரி தந்தவர். சட்டப்பேரவையில் 4, 5 முறை இருக்கிற பல சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முகவரி தந்தவர் என் தலைவர் கலைஞர். 8 கோடி மக்களுடைய இதய வேந்தராகவும், ஒட்டு மொத்த கழகத்தின் உதயசூரியனாகவும் இருக்கிற என் தலைவர் இந்தத் தமிழ்நாட்டை 5 முறை ஆண்டு இருக்கிறார். தமிழர்களின் உள்ளங்களில் எல்லாம் குடி கொண்டவர்! தாய்த் திருநாட்டினை வளப்படுத்தியவர்! தன்மானத்தின் தலைமகன்! அந்த முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டு விழா. அந்த நூற்றாண்டு விழாவை முன்னிட்டு அவருக்கு ஒரு நினைவிடத்தை உருவாக்க வேண்டு மென்று என் தலைவர் தளபதி அவர்கள் கருதுகிறார்கள்.

அப்படிப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞருக்கு நூற்றாண்டை போற்றுகின்ற வண்ணம் அவரின் அழகுமிகு நினைவிடத்தினை உலகத் தரத்துடன் அமைக்க ஆலோசனை வழங்கி—அதை இன்றைக்கு எல்லோரும் பாராட்டுகிறார்களென்றால் பொதுப் பணித் துறை அமைச்சராக இருக்கிற நானோ அல்லது எனது துறையோகூட அல்ல. வரைபடத்தை தேர்வு செய்தவர் அவரே. அந்த வரைடத்தை தயார் செய்தது தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களே. நவீன கட்டிடக் கலையுத்தியுடன் கலைஞர் உலகத்தை உருவாக்க வேண்டு மென்று சொன்னவர் அவரே. ஆலோசனை வழங்கியவரும் அவரே. ஆணை பிறப்பித்தவரும் அவரே.

எனவே, இந்த திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் முதலமைச்சர் அவருடைய பேச்சைக்கேட்டு அதை நாங்கள் உருவாக்கிக் கொண்டிருந்தோம். ஒருநாள் திடீரென்று சொன்னார். கலைஞருக்கு இப்போது புதிதாகக் கட்டிக் கொண்டிருக்கிறோமே, அவருடைய குருநாதர், அவருடைய தலைவர் அண்ணாவின் நினைவிடம் பாழடைந்துபோய் இருக்கிறது. கலைஞருக்கு இணையாக அதையும் சீர்செய்ய வேண்டுமென்று எவ்வளவு பெருந்தன்மையோடு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதனுடைய வெளிப்பாடுதான், வெள்ளைப் பளிங்குக் கல்லோடு இன்றைக்கு இரண்டும் ஒரே மாதிரி புதியதாக இருக்கின்றன. அண்ணா மீது தமிழ்நாட்டு முதலமைச்சர் வைத்திருக்கிற பற்றும் பாசமும் மிகவும் அதிகம். அந்த அடிப்படையிலே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினை விடத்தை அழகுற நாங்கள் புதுப்பித்தோம்.

‘கலைஞர் உலகம்’. இங்கே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களாகிய நீங்கள் எல்லோரும் தயவுசெய்து பார்க்கவேண்டும். எதிர்க்கட்சி நண்பர்கள் இருந்தால், ‘நீங்களும் போய் பாருங்கள்’ என்று கொஞ்சம் அறிவுரை சொல்லலாம் என்று கூட நான் நினைத்தேன். காரணம் என்னவென்றால், இந்த அருங்காட்சியகம் முப்பரிமாண ஒளியியல் (Holography), மிகை மெய்நிகர் தொழில்நுட்பம், ஊடாட்ட தொடுதிரை, எழுபரிமாண மெய்நிகர் அனுபவம், அதாவது 7D Train Experience, கண்டு இணைக்கும் தொழில்நுட்பம் போன்ற புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி, கலைஞர் அவர்களுடைய வாழ்க்கை வரலாறு அனைவரையும் கவரும் வகையில் அழகுற சித்தரிக்கப்ப ட்டிருக்கிறது.

திறக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை, சுமார் 16 இலட்சம் பார்வையாளர்கள் அந்த நினை விடத்தைப் பார்த்திருக்கிறார்கள். அதைவிட ஒன்று சொல்கிறேன். கடந்த 262024 அன்று, ஒரே நாளில் மட்டும் 59,211 பார்வையாளர்கள் அந்த நினைவிடத்தைப் பார்த்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே ஒரு நினைவிடத்தை இவ்வளவுபேர் பார்த்ததாக வரலாறே கிடையாது. அப்படிப்பட்ட சிறப்பான ஓர் உலகத் தரத்தோடு, அந்த நினைவிடம் இப்போது சிறப்பாக அமைந்திருக்கிறது. அந்த கலைஞர் உலகத்தை நீங்கள் பார்க்க வேண்டும், அல்லது இங்கு வராத நண்பர்கள், பக்கத்தில் தான்

## தென்காசி - ஆற்காடு - போடி - நெல்லை நகரங்களுக்கு ரூ.321 கோடியில் சாலை!

உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

என்றைக்கு அவர்கள் சட்டமன்றத்திற்கு வருகிறார்களோ, அன்றைக்கு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர், பொதுப் பணித் துறை அமைச்சர் உங்களுக்குச் சொல்லச் சொன்னார் என்று நீங்கள் சொல்லுங்கள். காரணம் என்னவென்று சொன்னால், அந்த “கலைஞர் உலகத்தில்” உலகத் தலைவர்கள், இந்திய தலைவர்கள், பெருந்தலைவர் காமராஜர், மூதறிஞர் இராஜாஜி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., ஏன்? மூன்று முறை தமிழ்நாட்டை ஆண்ட அம்மையார் ஜெயலலிதா, அம்மையார் ஜெயலலிதா அவர்களுடைய காட்சிகள் எல்லாம் முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளன. ஏனென்றால், அ.தி.மு.க.காரர்கள் வீட்டுக் கல்யாணத்திற்கு யார் போனாலும் கட்டம் கட்டுகிற கட்சி, அந்தக் கட்சி. ஆனால், எங்களுடைய முதலமைச்சர், ‘அந்த அம்மையார் தமிழ்நாட்டை 3 முறை ஆண்டவர், எனவே அதற்கு முக்கியத்துவம் தரவேண்டும்’ என்று சொன்னவர் தமிழ்நாட்டு முதலமைச்சர். எனவே, அவர்களுக்கெல்லாம் முக்கியத்துவம் தந்துதான், அந்த கலைஞர் உலகம் என்பதனை முதலமைச்சர் அவர்கள் சிறப்பாக அமைத்திருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது என்று சொன்னால், முதலமைச்சர் அவர்களின் பெருந்தன்மையைக் காட்டுகிறது: முதலமைச்சருடைய பரந்த உள்ளத்தைக் காட்டுகிறது; முதலமைச்சருடைய மாண்பைக் காட்டுகிறது; அரசினுடைய ஆளுமையின் உச்சத்தைக் காட்டுகிறது; அவர் அனைவருக்கும் பொதுவானவர் என்பதைக் காட்டுகிறது. அப்படிப்பட்ட சிறப்பான ஒரு கலைஞர் நினைவிடத்தைக் கட்டியிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அந்தக் கட்டடத்தைப் பொறுத்தளவிற்கு, பல இலக்கியப் புத்தகங்களை எல்லாம் நான் படித்திருக்கிறேன். ‘ஆய கலைகள் அறுபத்தி நான்கு’ என்று ஒரு சொற்றொடர் உண்டு. அந்தக் கலைகளில் ஒரு கலை “கட்டடக்கலை”. மொகலாயர்கள் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு மொகலாய கட்டடக் கலை என்று சொல்கிறார்கள்; மௌரியப் பேரரசில் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு மௌரிய கட்டடக் கலை என்று சொல்கிறார்கள்; பல்லவர் காலத்தில் கட்டப்பட்ட கட்டடங்களுக்கு பல்லவ கட்டடக் கலை என்று சொல்கிறார்கள்; சோழர்கள், தஞ்சாவூரில் பெரிய கோயிலைக் கட்டியவர்கள், சோழர்கள் கட்டிய கட்டடங்களுக்கு சோழர் கட்டடக் கலை என்று சொல்கிறார்கள்; ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட இந்தோசராசனிக் என்கிற கட்டடக்கலையை பிரிட்டிஷ் கட்டடக் கலை என்று சொல்கிறார்கள். அவைகளில், பல கட்டடங்கள், பல நூற்றாண்டுகளையும் கடந்து அப்பேரரசுகளின் திறமையையும், கலையையும், கலை உணர்வையும் இன்றைக்கும் பறை சாற்றிக் கொண்டிருக்கின்றன.

நமது தமிழ்நாடு முதலமைச்சர் பதவியேற்ற பின் அவர்களது சீரிய தலைமையில், அவரது வழிகாட்டுதலோடு, கட்டட வடிவமைப்பில், “வடிவம் செயல்பாட்டைப் பின்பற்றுகிறது” என்ற சொற்றொடருக்கு ஏற்றாற்போல், Artificial Intelligence, Virtual Reality, Biophilic Design போன்ற பல உயரிய தொழில் நுட்பங்களைத் தற்போது பயன்படுத்துகிறது இந்த பொதுப் பணித் துறை.

மேலும், வியட்நாம் மார்பிள், Quartzite கற்கள் போன்ற கட்டடத்தை மெருகூட்டும் கட்டுமானப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. கட்டட கட்டுமான வடிவமைப்பில், கூட்டமைப்பு தொழில்நுட்ப உத்தி, உயர் கான்கீரிட் கலவைகள், துருப்பிடிக்கா வேதிமுலாம் பூசப்பட்ட இரும்புக் கம்பிகள் போன்ற நவீன உத்திகள் பயன்படுத்தப்படுகின்றன. கட்டுமான முறையில், CNC தொழில்நுட்பம், Inlay தொழில்நுட்பம், பிரிபேப் தொழில்நுட்பம் (Prefab Technology) இப்படிப்பட்ட தொழில் நுட்பங்களை இன்றைக்கு பொதுப் பணித் துறை பயன்படுத்திக் கொண்டிருக்கிறது. பசுமை கட்டட உத்தி (Green Building Concept) ஆகிய தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டு, கட்டடங்கள் கலைநயத்துடன் கட்டப்பட்டு வருகின்றன. இதுபோன்று தற்போது கட்டப்பட்டுவரும் பல கட்டடங்கள், பல நூறு ஆண்டுகள் நிலைத்து அவரது நவீன கட்டடக் கலை அறிவை இந்த உலகம் அறியும்.

ஏற்கெனவே, நான் பட்டியலிட்டேன்; மொகலாயர் காலத்திலிருந்தே கட்டட கலையைப் பற்றிச் சொன்னேன். இப்படி நவீன யுக்தியைப் பயன்படுத்தி, new technologyஐப் பயன்படுத்தி, பொருட்களைப் பயன்படுத்தி, இப்போது கட்டப்படும் கட்டடங்களைப் பற்றி நூறு ஆண்டு காலத்திற்குப் பிறகு பேசப்படுகிறபோது, இந்தக் கட்டடக் கலையை ‘ஸ்டாலின் கட்டடக் கலை’ (மேசையைத் தட்டும் ஒலி) என்று கூறும் அந்த பெருமைக்குரிய காலங்கள் வரத்தான் போகிறது. அப்படிப்பட்ட பணிகளை நம்முடைய பொதுப் பணித் துறையின் சார்பாக செய்துகொண்டு வருகிறோம்.

இன்னொன்றைப் பற்றியும் நான் சொல்ல விரும்புகிறேன். முதலமைச்சர் அவர்கள், இம்மாமன்றத்தில் விதி 110ன்கீழ், 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம் கட்டப்படும் என்று அறிவித்தார்கள். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி 110ன்கீழ், 1987 ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு தொடர்பான போராட்டத்திலே காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டில் பலியான 21 சமூக நீதிப் போராளிகள் குறித்து நம்முடைய பாட்டாளி சொந்தங்கள் புரிந்துகொள்வதற்காக நான் இதைக் குறிப்பிடுகிறேன். 1987 ஆம் ஆண்டு இட ஒதுக்கீடு போராட்டத்தில் காவல் துறையின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான 21 சமூக நீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம் அமைக்கப்படும் என்று இந்த மாமன்றத்தில் அவர்கள் அறிவித்தார். அதனைத் தொடர்ந்து திருச்சிசென்னை நெடுஞ்சாலை, விழுப்புரம் வட்டம், வழுதரெட்டி என்கிற கிராமத்தில் 2.77 ஏக்கர் பரப்பளவில், அரசாணை எண் 169, நாள் 14-9-2023 ன்படி ரூ.5.70 கோடி மதிப்பீட்டில்8,416சதுரஅடியில்நூலகத்துடன்கூடிய மண்டபம் கட்டப்பட்டுவிட்டது.

விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முடிந்தவுடனே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால், அது திறக்கப்படும். ஏனென்றால், ஏதோ சொல்லிவிட்டு போய்விட்டார் என்று சில நேரங்களில் அறிக்கைவிட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதனால் நான் சொல்கிறேன். வர்ணம் பூசுகின்ற வேலை களெல்லாம் முடிந்து கொண்டிருக்கின்றன. இடைத்தேர்தல் வருகின்ற காரணத்தினால் அதைத் திறக்க முடியவில்லை. அதனால், இடைத்தேர்தல் முடிந்தவுடனேயே, உறுப்பினர் ச.சிவகுமார் அவர்களுக்கும் சேர்த்து சொல்கிறேன், அது திறக்கப்படும்.

அதோடுமட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அமைச்சராக, பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, என் தலைவர் கலைஞருடைய நண்பராக இருந்து, இதே மாமன்றத்தில் உரை நிகழ்த்தி, தென்னாற்காடு மக்களுக்கு விடிவெள்ளியாகத் திகழ்ந்தவர் அண்ணன் ஏ கோவிந்தசாமி அவர்கள்; நான் அறிவேன். ஏனென்றால், நான் படிக்கிறபோது அவர் தலைமையிலே நான் ஒரு dramaவையே நடத்தினேன். ‘எனக்கா தீர்ப்பு’ என்ற ஒரு நாடகத்தை அண்ணன் ஏ.கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் நடத்தியவன் நான்; எனக்கு அவரை நன்றாகத் தெரியும். சென்றமுறை இடைத்தேர்தலிலே, நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது, எங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அந்தத் தேர்தல் பரப்புரையில் பங்குபெற்றார்கள். அப்போது தேர்தல் பரப்புரையிலே ஒரு வாக்குறுதி தந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றால் இதுவரைக்கும் பாரா முகமாக இருந்த அண்ணன் A. கோவிந்தசாமிக்கு நான் நூலகத்தோடு மணிமண்டபம் கட்டுவேன் என்று தமிழ்நாடு முதலமைச்சர் தேர்தல் அறிக்கையிலே சொன்னார்.

இங்கே இருக்கிற நாம் அத்தனை பேரும் உழைத்து ஆட்சிப் பொறுப்பை முதலமைச்சர் அவர்களிடத்தில் கொடுத்தோம். முதலமைச்சர் அவர்கள் 20212022ல் நடைபெற்ற மானியக் கோரிக்கையில் ஏழையெளியோரின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு பெரும்பங் காற்றிய மறைந்த அண்ணன் தனிப்பெரும் தலைவர் பேரறிஞர் அண்ணாவினுடைய தம்பியாக, தலைவர் கலைஞருடைய உற்ற நண்பராக இருந்த அண்ணன் கோவிந்த சாமிக்கு அரசாணை எண் 170, நாள் 14 92023ன்படி ரூ.4 கோடி மதிப்பீட்டில் அவருக்கு 5,860 சதுர அடியில் நூலகத்துடன்கூடிய அரங்கம் கட்டப்படும் என்று சொன்னார்கள்; அது கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. வர்ணம் பூசிக் கொண்டிருக்கிறோம். இந்த இடைத்தேர்தல் முடிந்தவுடனேயே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய திருக்கரங்களால் அண்ணன் ஏ.கோவிந்தசாமிக்கு கட்டப்பட்ட நூலகத்துடன்கூடிய அரங்கமும், அவரது சிலையும் அங்கு திறக்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி) என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு பொதுப் பணித் துறையின் சார்பாக 17 அறிவிப்புகள் என்னால் வெளிடப்பட்டன. அனைத்து அறிவிப்புகளுக்கும் அரசாணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வாண்டு சில முக்கியமான அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

### பொதுப் பணித் துறை அறிவிப்புகள்

பாரம்பரிய கட்டடங்களைப் புனரமைக்கும் பணிகளை செம்மைப்படுத்தும் வகையில், சென்னையில் மரபுக் கட்டடங்கள் வட்ட அலுவலகம் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

1) பாரம்பரியக் கட்டடங்களைப் பாதுகாத்து மற்றும் மறுசீரமைத்து, புனரமைக்கும் பணிகளை விரைந்து செயல்படுத்துவதற்கு, சென்னையில் ஒரு மரபுக் கட்டடங்கள் வட்ட அலுவலகம், பணிப் பெயர்ச்சி மற்றும் ஒப்புவிப்பு (Redeployment & Surrender) அடிப்படையில் புதியதாக உருவாக்கப்படும்.

ஆறு பாரம்பரியக் கட்டடங்கள் ரூ.43.34 கோடி மதிப்பீட்டில் மறுசீரமைத்துப் புனரமைக்கப்படும்.

ஆறு பாரம்பரியக் கட்டடங்கள் ரூபாய் 43 கோடியே 34 இலட்சம் மதிப்பீட்டில் மறுசீரமைத்துப் புனரமைக்கப்படும்.

2) சென்னை, தி. நகரில் உள்ள காமராஜர் இல்லம் ரூ.2.60 கோடி மதிப்பீட்டிலும்,

தொடர்ச்சி 7 – ஆம் பக்கம்